பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 22 திங்கட்கிழமை (07-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 255

# கப்பல்களுக்கு செஞ். குழு பாதுகாப்பு

# வழங்குவதில் தடங்கல் நிலை நீடிப்பு

## அரசு தரப்புடனான பேச்சில் பலனில்லை

கொழும்பு, ஓகஸ்ட் 7

யாழ். குடாநாட்டுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் கப்பல்களில் எடுத்துச்சென்று விநியோகிப்பது தொடர்பாக—

இணக்க நிலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசுடன் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு கொழும்பில் நடத்திய பேச்சுக்களில் இணக்க நிலை ஏற்படவில்லை. தொடர்ந்து தடங்கல் நிலவுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் "லங்கா முடித" கப்பலில் யாழ். செயலகத்துக்கு என எடுத்து வரப்பட்ட பொருள்களில் ஒருபகுதியை காங்கேசன்துறைக் கடலில் வைத்து, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரின் அனுமதியின்றி ஸ்ரீலங்காப் படையினர் பலவந்தமாக இறக்கி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கிளாயிலிருந்து சிங்கள மீனவர் தப்பி ஓட்டம்!

கொழும்பு, ஓக. 7

கொக்கிளாய் மீனவக் கிராமத்தில் அரசினால் குடியேற்றப்பட்ட சிங்கள மீனவர்கள் வடக்கு — கிழக்கு யுத்தம் காரணமாக குடியேற்றப்பட்ட பிரதேசத்திலிருந்து தப்பி ஓடியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தப்பியோடிய மீனவக் குடும்பங்களில் 125 குடும்பங்கள் நீர்கொழும்புக்குச் சென்றுள்ளன. அவற்றில் பல நீர்கொழும்பு துவாப் பகுதியிலும் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றிலும் தற்காலிகமாகத் தங்கியுள்ளன.

அவர்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அவர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் மீன்பிடி, கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் இந்திக குணவர்த்தனா ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

உ

தெல்லிப்பழை

துர்க்காதேவி தேவஸ்தானம்

விசேட கூட்டம்

மேற்படி கூட்டம் 10 - 08 - 95 வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் நடைபெற இருக்கிறது. பின்வருவோரைத் தயவு செய்து சமுகமளிக்கும்படி அன்பாக வேண்டுகிறேன்.

1. தேவஸ்தான அந்தணப் பெருமக்கள்
2. நிர்வாக சபையினர்
3. தேவஸ்தான உத்தியோகத்தர்கள்
4. தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர்.
5. துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையினர்
6. சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர்

தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்.

07-08-95
(37896)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## அதிரடிப்படை சிப்பாய் பலி!

கொழும்பு, ஓக. 7

அம்பாறைக்கு தென். கிழக்கே அக்கரைப்பற்று ஆறாவது மைல் கல்லடியில் கடந்த வியாழக்கிழமை ரோந்து சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அதிரடிப்படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். [உ-3]

## நாளை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7

அரசின் தீர்வுத் திட்ட யோசனைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளன. [உ-6]

### வடக்கே வரத் தயார் நிலையில்

## 3 கப்பல்கள் கொழும்பில் பொருள்களுடன் 'தவம்'!

யாழ்ப்பாணம், ஓக. 7

வடக்கே ஏற்றிவருவதற்கான பொருள்களுடன் மூன்று கப்பல்கள் தயார்நிலையில் கொழும்புத்துறைமுகத்தில் "தவம்" கிடப்பதாகவும் —

ஆனால் வடக்கே பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் பாதுகாப்பு வழங்குவது குறித்து அரசுக்கும் செஞ்சிலுவைப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் முன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் நிலையம் மீது பொத்துவிலில் தாக்குதல்

பொத்துவில் ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையம் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இத்தாக்குதல் தொடர்பான விடுதலைப் புலிகளின் தரப்பு செய்திகள் இதுவரை கிடைக்கவில்லை. (உ-3)

# இன்றையபாடத்துக்கான வினாத்தாள் நேற்று வரை வந்து சேரவில்லை

### இன்று காலையே வந்துசேரும் எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 7

தற்போது நடைபெற்று வரும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் இன்னும் வந்து சேரவில்லை.

இன்று திங்கள் காலை நடைபெற உள்ள பாடத்துக்கான வினாத்தாளும் இந்த இரண்டாவது தொகுதியிலேயே அடங்கி இருக்கிறது.

முதலாவது தொகுதி வினாத்தாள்களுக்குரிய பரீட்சைகள் கடந்த சனிக்கிழமையுடன் நடந்து முடிந்துவிட்டன.

இன்றைய பாடங்களுக்கான வினாத்தாள் இன்றுகாலையே வந்து சேரும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

இன்று முதல் நடைபெறும் பாடங்களுக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் பரீட்சை திணைக்கள அதிகாரிகளால் கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டு அங்கு தரித்திருந்த 'ஹபரண' கப்ப

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பரீட்சை ஆரம்பமாவது இன்று தாமதமாகலாம்

இன்றைய காலைப் பாடத்துக்குரிய வினாத்தாள்களை விநியோகம் செய்வதில் சில வேளைகளில் தாமதம் ஏற்படலாம் என்றும் —

வினாத்தாள் பொதிகள் பரீட்சை மண்டபங்களுக்கு வந்து சேரும் வரை பரீட்சார்த்திகளும், பரீட்சை உத்தியோகத்தர்களும் தயாராகக் காத்திருக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இன்று காலை வினாத்தாள் பொதிகள் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்ததும் உடனடியாக அவை இறக்கப்பட்டு இன்றைய காலைப் பாடமான இரசாயனவியல் II இற்கு உரிய வினாத்தாளை உடனடியாக பரீட்சை நிலையங்களுக்கு அனுப்ப விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-3)

## அமைச்சர் கதிர்காமருக்கு அதிகரித்த பாதுகாப்பு!

கொழும்பு, ஓக. 7

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் பிரசாரம் செய்ததால் —

இவரது உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கருதியே முன்னரை விடப் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகக் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரின் உள்நாட்டு, வெளிநாட்டு நடமாட்டம் குறித்து ஒரு சில நெருங்கிய அதிகாரிகள் தவிர வேறு எவருக்கும் தெரியாது. அவர் வெளிநாடு செல்லும் போது கொழும்பை விட்டுச் சென்ற பின்னரே எமக்குத் தெரிய வருகிறது — என்று அரசாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். [அ]

## மூதறிஞர் சிவப்பிரகாசம் காலமானார்

யாழ்ப்பாணம், ஓக. 7

மூதறிஞரும், சைவப் பெரியாரும், மிக மூத்த பத்திரிகையாளரும், பிரபல சட்டத்தரணியுமான நம. சிவப்பிரகாசம் நேற்றுக் காலமானார்.

சட்டத்தொழிலில் பெயர் பெற்று விளங்கிய இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் சைவசித்தாந்தத்திலும் புலமை மிக்கவராவார்.

மிக நீண்டகாலமாக "இந்து சாதனம்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்து சைவ சமய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டு புரிந்தவர்.

கவி புனைவதிலும் வல்லவரான இவர் வரகவியாக உடனுக்குடன் சிறந்த வெண்பாக்களை இயற்றும் ஆற்றல் பெற்

(5 ஆம் பக்கம் பார்க்க)

உ

வட்டு கிழக்கு துறட்டிப்பனை

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## அலங்கார உற்சவம்

அலங்காரத் திருவிழா கடைசி 3 நாட்களும் சிறப்பாக நடைபெற இருப்பதால் அடியவர்கள் அனைவரும் திரண்டு வந்து வாழ்க்கை வளம் பெறவும், மனநிம்மதியுடன் வாழ வேண்டியும் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

நாளை 8-8-1995 ஆம் திகதி ஆடிச்செவ்வாய்க் கிழமை காலை அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று சப்பறத்திருவிழா நடைபெறும்.

9 8-1995 புதன் காலை 5. 30 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று, திருத்தேரில் அம்பாள் பவனி வருவார்.

10-8-1995 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழா.

தேவஸ்தான பாதுகாவலர்

[37905]



மூதறிஞர் சைவப்பெரியார்

## நம. சிவப்பிரகாசம் ஐயா

அவர்களின் மறைவை முன்னிட்ட

## இதய அஞ்சலி

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 28 ஆண்டுகள் உபதலைவராகவும் சிறந்த சட்ட ஆலோசகராகவும் விளங்கி ஆலய வளர்ச்சியிலும் துர்க்காபுரம் மகளிர் இல்ல வளர்ச்சியிலும் பெரும் பங்கெடுத்துப் பணியாற்றிய சைவப்பெரியார்

நம. சிவப்பிரகாசம்

அவர்கள் 06 - 08 - 1995 இல் இறையடி சேர்ந்தமையை முன்னிட்டு நாமனைவரும் தேவஸ்தானச் சார்பில் எமது இதய அஞ்சலியை அன்னாரின் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

துர்க்காதேவியின் திருவடிகளில் இந்தப் புனித ஆன்மா சாந்தி அடையட்டும்.

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(37901]



நெஞ்சத்தை விட்டகலாத
விண்ணக வாழ்வின்

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



| தாய் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 08 | 08 |
| — | — |
| 11 | 07 |
| — | — |
| 1942 | 1995 |

### அமரர் சிறில் செபமாலை

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்ற உறுதியாக நான் உனக்குச் சொல்கிறேன்"
(லூக் 23:43)

அன்பின் திருவுருவே பாசத்தின் இருப்பிடமே, குடும்பத்தின் குலவிளக்கே, தன்னையே தீபமாக்கி எம்மைக்காத்த அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாதம் சென்றாலும் உங்கள் அன்புருவம் எங்கள் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

இவரின் ஆன்மா சாந்தி அடைய இன்று (07-08-1995) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் அனைவரும் பங்குபற்றி மன்றாடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

இல: 200, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (37900)


# அரசின் தீர்வு யோசனைக்கு அமெரிக்கா வரவேற்பு

வாஷிங்டன், ஒக. 7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டுள்ள அரசியல் தீர்வு யோசனைகளை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் அழிவை ஏற்படுத்திவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இது ஊக்கமளிக்கும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

இலங்கை அரசின் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வழிவகுக்கும் என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் பதில் பேச்சாளர் டேவிட் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைகள் இலங்கை ஜனநாயக அரசியல் முறையை சீர்திருத்தும் என்றும்—

சகல சமூகங்களும் முழுமையான அளவில் அரசியல் ரீதியில் கலந்து கொள்ளவும், தனி நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வழிவகுக்கும் என்றும் கிளின்ரன் நிர்வாகம் நம்புவதாக டவிட்ஜோன்சன் மேலும் கூறியிருக்கிறார். [ஐ-க]

# புலிகள் பங்களிப்பின்றி தீர்வுத் திட்டம் பயனற்றது

## ரெலோ செயலர் கருத்து

"விடுதலைப் புலிகளின்றி அரசின் தீர்வுத் திட்டம் குறித்து முடிவு எடுக்கலாம் என சிலர் கருதுகின்றனர். ஆனால் நாங்கள் அப்படிக் கருதவில்லை"

"சமாதானத்திற்கான இத் தீர்வுத் திட்டத்துக்கு புலிகளின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. எனவே புலிகளை பேச்சுக்குக் கொண்டு வருவது குறித்து அனைவரும் சேர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும்.

— இவ்வாறு ரெலோ பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

இந்த தீர்வுத் திட்டத்தை அரசு கூடிய விரைவில் புலிகளுக்கு அனுப்ப வேண்டும்.

கிழக்கிலிருந்து தேவையானால் அம்பாறை தேர்தல் தொகுதியை மட்டுமே விலக்கலாம் என்பதே எமது முடிவாகும் — என்று அவர் மேலும் குறிப்பிட்டார். [உ-3-6]

# அரசின் தீர்வுத் திட்டத்திற்கு தினேஷ் கடும் எதிர்ப்பு

கொழும்பு ஒக. 7

அரசின் தீர்வுத்திட்ட யோசனையை நடைமுறைப் படுத்தினால் நாடு பிரிவினைவாதிகளிடம் சென்று விடக் கூடும் என்று தெரிவித்து எதிர்ப்பு வெளியிட்டிருக்கிறார் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா.

இன்று யூகோஸ்லேவியாவில் ஏற்பட்டுள்ள நிலையை நாங்கள் சட்டபூர்வமான வழியில் தேடிக்கொள்ள முயல்வது கவலைக்குரியது உத்தேச யோசனைகளின் படி —

வடக்கு - கிழக்கு பிராந்தியமே ஏனையவற்றை விட பெரியதாக இருக்கும் அந்த விசாலமான பிராந்தியத்தின் அதிகாரங்கள் ஏனைய பிராந்திய அரசுகள் மீது பாதிப்பை ஏற்படுத்தும்.

அத்துடன் இந்த யோசனைகளில் நாடாளுமன்றம் தனது அதிகாரங்களை இழந்து விடும் — இவ்வாறு அவர் மேலும் கூறினார். [உ-6]

# மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 7

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெற உள்ள வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக அதன் அறிக்கை வருமாறு:—

ஸ்ரீலங்கா அரசானது திட்டமிட்டு தமிழீழ மக்களை கொன்று ஒழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கின்றது.

பொருளாதாரத் தடையை நீண்ட காலமாக விதித்து தமிழ் மக்களை பட்டினி போட்டு அடிபணியவைக்கலாம் என்ற பகற்கனவுடன் மேலும் பொருளாதாரத் தடைகளை விதித்து அழுத்த முற்படுகிறது

விவசாய உள்ளீட்டுப் பொருள்களையும் வடபகுதிக்குள் விடாமல் பலமாதமாக தடைசெய்துள்ளது.

இதேவேளையில் இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் எமது மண்மீதும், மக்கள் மீதும், குண்டு வீசியும், ஏவியும் அழிக்கின்றது.

உலகெங்கும் நடைபெறாத கொடுமையை புரியும் ஸ்ரீலங்கா அரசு வெளியுலகிற்கு வெளிவேடமிட்டு உள்ளது.

எனவே ஸ்ரீலங்கா அரசின் வெளிவேடத்தையும், முகத்திரையையும் கிழித்தெறிந்து உண்மை நிலையை உலகிற்கு அம்பலப்படுத்த அனைத்து தமிழீழ மக்களும் ஒன்று திரண்டு எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெற உள்ள வெகுஜனப் போராட்டத்தில்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ரத்வத்தையின் அமைச்சில் ஈ.பி.டி.பிக்கு அவமதிப்பு!

கொழும்பு, ஒக. 7

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையைச் சந்திப்பதற்காக பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்ற டக்ளஸ் தேவானந்தா உட்பட ஈ.பி.டி.பி. எம். பிக்கள் மூவர் அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் அவமதிக்கப்பட்டதை அடுத்து அமைச்சரைச் சந்திக்காமலேயே அவர்கள் மூவரும் அங்கிருந்து திரும்பினர்.

கடந்த வெள்ளியன்று காலை இச்சம்பவம் நடைபெற்றது.

வடபகுதி உணவு, மருந்து தட்டுப்பாடு நிலைவரம் தொடர்பாகவே இவர்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரைச் சந்திக்கச் சென்றிருந்தனர்.

அமைச்சரைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டை ஜனாதிபதியே செய்திருந்தார்.

மூன்றாம் மாடியில் உள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஒக. 7

வட்டு — கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் அலங்கார உற்சவ நிறைவாக நாளை செவ்வாயன்று விசேட அபிஷேகமும், சப்பறத் திருவிழாவும் நடைபெறும்.

நாளை மறுதினம் தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-3)

# ஷெல் தாக்குதலில் காயமுற்றவர் மரணம்

மண்டைதீவு முகாமில் இருந்து நேற்று முன்தினம் மாலை குருநகர் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த 9 பேரில் ஒருவர் நேற்றுக் காலை அங்கு மரணமானார்.

றோபேட் புறொக் கிடா [ஆரியகுமாரி — 40 வயது] என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ-13-15)

# தென்மராட்சியில் வீதி விபத்து அதிகரிப்பு

தென்மராட்சி, ஒக. 7

தென்மராட்சிப் பகுதியில் வீதி விபத்துக்கள் தினமும் அதிகரித்து விபத்துக்களில் படுகாயமடைவோர் எண்ணிக்கையும் பெருகி வருகின்றன.

கடந்த வாரமும் நுணாவில் வைரவர் கோவிலடியில் இடம்பெற்ற லான்ட் மாஸ்டர், மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

கடந்த வாரம் நடைபெற்ற வேறொரு சம்பவத்தில், வரணி இயற்றாலையில் ட்ராக்டர் ஒன்றுடன் சைக்கிள் மோதியதால் சைக்கிளில் வந்த இருவர் படுகாயங்களுக்குள்ளானார்கள் சைக்கிள் பலத்த சேதமடைந்தது. [வ-117]

# விறகு விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக. 7

மக்களின் தேவையை கருத்தில் கொண்டு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வர்த்தகப் பகுதி பெருநிலப்பரப்பிலிருந்து காட்டு விறகைத் தருவித்து கொக்குவில் தேங்காய் விநியோக நிலையத்தின் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

---

## இன்றைய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லில் நேற்று முன்தினம் ஏற்றப்பட்டதாகவும்—

திட்டமிட்டபடி கப்பல் நேற்று முன்தினம் வடக்கு நோக்கி புறப்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் பொருள் ஏற்றுவதில் கடற்படையினர் விதித்த சில தடைகளால் வடக்கு நோக்கி கப்பல் புறப்பட தாமதமானதாகவும் —

இவ்விடயம் ஓரளவு சரி செய்யப்பட்டதையடுத்து கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டதாகவும் —

நேற்றிரவு காங்கேசன் துறையில் தரிக்கும் இக்கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்து இன்று காலை விளாத்தாள்கள் இறக்கப்பட்டதும் உடனடியாக பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பப்படும் என்று கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

# கொக்குவில் மேற்கு சித்திவிநாயகர் (ஐயனார்) ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பிதழ்

**07 - 08 - 1995**

## ஆசியுரைகள்

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே.

கொக்குவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி. ஆலய விழாக்களில் ரதோற்சவம் முதலிடம் பெறும். இத்தேரை உருவாக்க போதிய நிதி ஈந்து எல்லா வகையாலும் தொண்டுகள் புரிந்த அன்பர்களையும் ஸ்தபதியார் திரு. ஆ. ஜீவரட்ணம் அவர்களையும் பாராட்டுகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

நல்லை ஆதீன முதல்வர்

---

சிந்தை நொந்து வரும் அடியவர் துயர் நீக்க சித்திரத் தேரேறிவரும் சித்தி விநாயகப் பெருமான் திருவருள் அடியவர் அனைவருக்கும் கிட்டப் பிரார்த்தித்து ஆசி வழங்குகிறேன்.

ஆலய பிரதம குரு
பிரம்ம ஸ்ரீ க. பத்மநாதக் குருக்கள்.

---

ஆன்ம கோடிகள் இகபர சுகம் பெற்று வாழ சித்திரத்தேர் ஏறும் சித்திவிநாயகர் கழலடி இறைஞ்சி ஆசி கூறுகின்றேன்.

மகோற்சவ குரு சிரேஷ்ட குருமணி

ந. இராதா கிருஷ்ணராஜக் குருக்கள்
பிரதமகுரு தாவடி தெற்கு
வேம்படி முருகமூர்த்தி கோவில்

---

கொக்குவில் மேற்கு அருள்மிகு சித்திவிநாயகர் (ஐயனார்) சித்திரத்தேர் வெள்ளோட்டம் இனிதே நிறைவுறும் இந்நாளிலே விநாயகப்பெருமானின் திருவருளை வியந்து போற்றுவோம்.

முன் எப்போதும் இல்லாதவகையிலே இன்று தமிழீழம் இசை, நடனம், நாடகம் உள்ளிட்ட கவின் கலைகளில் மிக உயர்ந்தே காணப்படுகின்றது. இத்தவகையிலே ஆலயச் சூழல்களிலும் கவின் கலைகள் இன்று சிறப்புற்று மிளிர்கின்றமையை அவதானிக்கின்றோம்.

சித்திரத்தேர் உருவாக்கம் தமிழர் தம் பண்பாட்டின் சின்னம். இதிலே ஈழத் தமிழர்கள் தனித்துவமும் தனித்திறனும் பெற்று விளங்குகிறார்கள். அண்மைக்காலத்தில் உருவான எமது சித்திரத்தேர்ப் பண்பாடு இதைக் காட்டுகிறது.

சிற்பச் சக்கரவர்த்தி
ஆ. ஜீவரட்ணம்.
ஆறுமுகம்சிற்பாலயம்,
திருநெல்வேலி.

## மக்கள் உள்ளம் கவரும் மகோற்சவ தேர்த்திருவிழா

ஆன்மா இறைவனிடம் லயப்படும் இடம் ஆலயமாகும். இறைவன் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் இடமே ஆலயம் ஆகும். நைமித்தியகிரியைகளில் சிறப்பிடம் பெறுவது மகோற்சவமாகும். பஞ்சகிருத்தியத்தில் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கிறது. மகோற்சவக் கிரியைகளில் மக்களின் உள்ளத்தைக் கவரும் திருவிழா இரதோற்சவமாகும்.

ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து வடத்தைப் பிடித்து இழுத்தால் தான் தேர் இழுபடும். கிராம மக்கள் அனைவரும் ஒன்றுபடும் இடமாகவும் தேர்த்திருவிழா அமைந்துள்ளது.

ஆலயங்களில் பயன்படுத்த வேண்டிய தேரின் இலக்கணங்களைப்பற்றி இந்நூல் விரிவாக எடுத்துக் கூறுகிறது.

வட்டமாகவும் சதுரமாகவும் அறுகோணமாகவும், எண்கோணமாகவும் அமைக்கப்படும் பலவகைத் தேர்கள் உள்ளன. ஆலயக் கட்டட அமைப்பைப் போலவே இவற்றையும் நாகரம், திராவிடம், வேசரம் எனப்பகுத்துக் கூறுவதுண்டு. மேல்பாகம்பல தட்டுக்கள்கொண்டதாகவும் கீழ்ப்பாகம் சிற்ப வேலைப்பாடுகள் கொண்டதாகவும் இருக்கும். பீடம் வரை மரத்தினால் சிற்ப வேலைப்பாடுகளுடன் செய்து மேலே சீலைகள் மற்றும் கொடிகள் ஆகியவற்றினால் அலங்கரிக்கப்படும்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்**
விரிவுரையாளர் – பலாலி ஆசிரிய கலாசாலை

ஆகமங்களைப் பின்பற்றி எழுந்த சிற்பசாஸ்திர நூல்களில் ''மானசாரம்'' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டுத் தேர்களே இந்தியாவில் அதிகம் உள்ளன. இவையே தேர்கள் எனவும் முழுமையாக மரத்தில் உருவாக்கப்படுபவை சித்திர ரதங்கள் எனவும் கூறப்படும்.

மனித உடல் போலவும் இப்பிரபஞ்சம் போலவும் தேர் உருவாகிறது. எப்பக்கத்தில் நின்று பார்த்தாலும் ஒரே வகையான தோற்றம் தருமாறு அமைவது தேரின் சிறப்பாகும்.

கொக்குவில் மேற்கு விநாயகப் பெருமான் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் காட்சி இம்முறை தேர்த் திருவிழாவில் நடைபெற உள்ளது.

★

## வெள்ளோட்ட விழா நிகழ்ச்சி

★ இன்று மாலை 4-30 மணிக்கு — புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்.

★ சித்திரத்தேரை நிர்மாணித்த ஸ்தபதி சிற்பச் சக்கரவர்த்தி ஆறுமுகம் ஜீவரட்ணத்தையும் அவரது குழுவினரையும் பாராட்டுதல்.

★ பெரியோரது வாழ்த்துரைகள்.

★ ஆசிச் செய்திகள்.

## வெள்ளோட்டம் காண வாரீர்!

கொக்குவில் மேற்கு. அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பில் 1993 ம் ஆண்டு ஆடி மாதம் 4 ம் திகதி அமர்த்தப்பட்டோம். எமது ஆலயத்தில் கடந்த சில வருடங்களாக தேர்த்திருவிழா நடைபெற்று வந்த போதும் தேர் இருக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் சிறிய கட்டுத்தேர் ஒன்று உருவாக்கப்பட்டு திருவிழா நடைபெறும்.

விநாயகப் பெருமானின் பெருங்கருணையினாலும் அடியார்களின் பங்களிப்பினாலும் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய கலைஞர்களின் கைவண்ணத்தில் அழகிய சித்திரத் தேர் உருவாகி இன்று வெள்ளோட்டம் காண்கின்றோம். இத்திருப்பணியை செய்ததில் மன நிம்மதி அடைகிறோம். வெள்ளோட்டம் காண வாரீர் என்று அனைவரையும் அழைக்கின்றோம்.

செ. ந. விஸ்வலிங்கம்
(சட்டத்தரணி)
தலைவர்
ஆலய நிர்வாகசபை

---

## நன்றி நவில்கின்றோம்

ஏறக்குறைய நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது இவ்வாலயம். ஆரம்பகாலந்தொட்டு அலங்காரத் திருவிழாவே ஆண்டுப் பெருவிழாவாக அமைந்தது. கடந்த பத்து ஆண்டுகளாக கொடியேற்றத்துடன் கூடியதாக ஆண்டுப் பெருவிழா நடைபெற்று வருகிறது. எனினும் தேர்த்திருவிழாவில் விநாயகப்பெருமான் கட்டுத்தேரிலேயே பவனி வந்தார்.

மிகக் குறுகிய காலத்தில் சித்திரத்தேர்த் திருப்பணி சிறப்புடன் நிறைவேற ஆலய நிர்வாக சபையினரும், தேர்த்திருப்பணிச்சபை உறுப்பினர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். இவர்களுக்கும், நிதியுதவி, பொருளுதவி புரிந்தோர்க்கும் சிற்பாசாரியார் அவர்களுக்கும் மேற்படி நல்லதொரு கைங்கரியத்தினை செய்வதற்கு எனக்கு தலைமை பொறுப்பினை தந்து வாய்ப்பளித்த கிராம மக்களுக்கு நன்றி நவில்கின்றோம்.

க. வை. சற்குணம்
தலைவர், தேர்த்திருப்பணிச்சபை

சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற நிகழ எங்கள் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

(விளம்பர இல: சி/2005)

**நிரு கல்வி நிலையம்**

கோண்டாவில்.

## நினைவுக் கற்கள் நாட்டப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 7

கடந்த 28ஆம் திகதி மணலாறில் வீரச்சாவடைந்த 21 மாவீரர்களினதும் நினைவுக் கற்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாவீரர் துயிலும் இல்லங்களில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நடப்பட்டன.

வீரவேங்கைகளான நந்தினி, அஜந்தா, புஸ்பலதா, உஷா நந்தினி, மோகனா, புனிதா, கருணா, பாமா, மாதங்கி, புலிக்குட்டி, குமுதினி, செம்பிறை ஆகியோரின் நினைவுக் கற்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் —

தென்மராட்சியை சேர்ந்த மாவீரர்களான வீரவேங்கைகள் வினோதா, அன்பு, மாலினி, இசைபிரியா, வெண்மதி, காயத்திரி, சூரியா, வளர்மதி, தேன்மொழி அல்லது றமணி ஆகியோரினது நினைவுக்கற்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் — பூரண இராணுவ மரியாதைகளுடன் நடப்பட்டன. (ஏ-4)

## மாணவர் முத்திரைக்கு பொருள்கள்

யாழ். பிரதேச சபைச் செயலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகளுக்கு தற்போது பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் பெற்றுக் கொள்ளும்படியும் —

தற்போது விநியோகிக்கப்படும் 25 ஆவது சுற்று மண்ணெண்ணெயை சகலரும் பெற்றுக் கொள்ளும்படியும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-30)

## நல்லூர் ஆலய சுற்றாடலில் இன்று

கொழும்பு, ஓக. 7

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் ஏழாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

★ நாவலர் மணி மண்டப முன்றலில் —

மாலை 6-00 மணிக்கு சுகந்தி சுந்தரம் பாட்டு. மாலை 7 மணிக்கு திரு. கே. ராமநாதன் பாட்டு.

★ நல்லை ஆதீன கலா மண்டபத்தில்—

பி. ப. 3-00 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப்பேருரை.

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —

மாலை 5-30 மணிக்கு பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரையில் ''அஜாமிளன்'' (எ-30-111)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### நற்கதி தருவான் கந்தன்

சோதனை தீர வில்லை
சுதந்திர வாழ்வு இல்லை
வேதனை யோடு நாங்கள்
வீதியில் நாய்கள் ஆனோம்
சாதனை படைக்கும் எங்கள்
தம்பியர் வெற்றி காண
நாதனை வணங்கி நிற்போம்
நற்கதி தருவான் கந்தன்.

— வ. யோகானந்தசிவம்.

### ஆறுமுகா அருள்தர வா வா!

தில்லை நாதனின் மைந்தனே வாவா
தெய்வானை வள்ளியர் நாயகா வாவா
நல்லை நாதனே நலம்தர வாவா
நாடிய தேவரைக் காத்தவா வாவா
வல்ல வேலுடைத் தெய்வமே வாவா
வாழும் வழியினைக் காட்டிட வாவா
அல்லல் தீர்த்திடக் கந்தனே வாவா
ஆறுமுகனே அருள்தர வாவா!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

# சிங்கள பௌத்தரின் நலன்களை அரசின் தீர்வுத் திட்டம் பாதிக்கும்

## நிராகரிக்கின்றனர் பௌத்த தேரர்கள்

கொழும்பு, ஒக. 7

அரசின் தீர்வு யோசனைகளால் வடக்கும் - கிழக்கும் இணையும் அதன் மூலம் புலிகள் அதிகுபலம் பெறுவர். வெளிநாட்டு உதவியுடன் அவர்கள் ஏனைய பகுதிகளைக் கைப்பற்ற முனைவர் ஆதலால் சிங்கள பௌத்தர்களின் நலன்கள் பாதிக்கப்படும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தேசப்பிரேமி பிக்கு முன்னணியின் செயலாளர் வண. பிங்கமுவே நாலந்த தேரர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வெளியிட்டுள்ள அரசியல் தீர்வு யோசனை தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே தேரர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் உள்ள மொத்த தமிழ் மக்களில் 41 வீதத்தினர் மட்டுமே வடக்கு - கிழக்கில் வசித்து வருகின்றனர் ஏனையோர் நாட்டின் பிற பகுதிகளில் சிங்கள மக்களுடன் கலந்து வாழ்கின்றனர்.

எனவே தமிழ் மக்களுக்கு பிரச்சினை உள்ளதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசின் தீர்வு யோசனைகள் இல்லாத பிரச்சினை ஒன்றுக்கு தீர்வு தேடுகின்றன.

இந்த யோசனைகள் நாட்டை எட்டாகப் பிரித்து 9 அரசுகளை உருவாக்கும் இவை இந்திய மாநிலங்களைப் போன்றவை ஆகும். வடக்கும் - கிழக்கும் இதன் மூலம் இணைகின்றன விடுதலைப் புலிகள் அங்கு பலம் பெறுவர் வெளிநாட்டு உதவியுடன் அவர்கள் ஏனைய பகுதிகளைக் கைப்பற்ற முனைவர்.

ஆதலால் சிங்கள பௌத்தர்களின் நலன்கள் பாதிக்கப்படும். எனவே நாங்கள் அரசின் யோசனைகளை நிராகரிக்கின்றோம்— என்றார்.

ஜனாதிபதி வெளியிட்ட தீர்வு யோசனைகள் குறித்து தென்பகுதி பௌத்த பிக்குகளிடையே முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன.

அரசின் திட்டத்தை ஒரு சாரார் ஆதரித்தும் மறு சாரார் எதிர்த்தும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

### அஸாஜி தேரர்

வண. மாதம்பகம அஸாஜி தேரர் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மாகாணசபைத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட போது பலர் அதனை எதிர்த்தனர். ஆனால் பின்னர் அவர்களே அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டனர்.

தற்போதைய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பேதங்களை மறந்து தீவிர வாதம் அற்ற நோக்குடன் பிரச்சினைகளை அணுக வேண்டும். அரசின் இந்த யோசனைகளால் சிங்கள பௌத்த தனித்துவம் பாதிக்கப்படும் என்பதை நிராகரிக்கிறேன். இது காலத்துக்குப் பொருத்தமான நடவடிக்கை ஆகும்.— என்றார்.

### எல்லே குணவன்ச

சிங்கள மகாஜன முன்னணியின் தலைவர் வண எல்லே குணவன்ச தேரர் தெரிவித்திருப்பதாவது:-

தீர்வு யோசனைகளை அரசு சமர்ப்பித்துள்ள முறை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவை வெளிநாட்டவர்களைத் திருப்திப்படுத்துமே தவிர இலங்கையர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமாட்டா.

நில வளங்களைப் பகிர்ந்திடும் திட்டத்துக்கு நாங்கள் முற்றாக எதிர்ப்புத் தெரிவிக்கிறோம்—என்றார். (ஐ-6)

---

புலிகளின் குரல் வானொலியில்

07 - 08 - 1995

**திங்கள் இரவு**

- ★ 8-02 — தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — சமகாலப் பார்வை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40— தரிசனம் - நிகழ்ச்சியில் தீபக கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. கனகலிங்கத்துடனான செவ்வி

08 - 08 - 1995

**செவ்வாய் காலை**

- ★ 7-02 —மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகை செய்திகள்
- ★ 7-45 — தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

**திங்கள் மாலை**

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-03 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — நேயர் நெஞ்சம்

## சிகிச்சைப் பிரிவு இடமாற்றம்

கொழும்புத்துறை, ஒக. 7

மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இதுவரை காலமும் இயங்கிவந்த, வெளி நோயாளர் சிகிச்சைப் பகுதியும், மல்லாகம் செஞ்சிலுவைச் சங்க கட்டடத்தில் இயங்கி வந்த விசேட சிகிச்சைப் பிரிவுகளும் தற்பொழுது, மானிப்பாயில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பிரதி வியாழக்கிழமைகளில் நடைபெற்று வந்த குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு வெள்ளிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இவ்வைத்திய சாலையின் ஏனைய சிகிச்சைப் பிரிவுகளும் வழமை போல் இயங்குகின்றன. (எ-30)

## புலிகளை தோற்கடிப்பதே நிரந்தரத் தீர்வுக்கு வழி

### நளின் டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஒக. 7

இனப்பிரச்சினைக்கான ஒரேயொரு தீர்வு விடுதலைப் புலிகளை யுத்தத்தில் தோற்கடிப்பதே ஆகும்.

கலாநிதி நளின் டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசின் யோசனைகள் பிரிவினைவாதிகளைத் திருப்திப் படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டவையாகும்.

நாட்டைப் பிரிக்கப்போராடும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதே இனப்பிரச்சினைக்கான ஒரேயொரு தீர்வு ஆகும்.

அமைச்சர் மங்கள சமரவீர கூறியது போன்று கட்டாய இராணுவ சேவையை அரசு அறிமுகப்படுத்துமாயின் அது வரவேற்கக்கூடியதே. ஆனால் அரசு அப்படிச் செய்யும் என நான் நம்பவில்லை.

கட்டாய இராணுவ சேவை அறிமுகப்படுத்தப்பட்டு — உண்மையான போர் நடைபெறுமானால் நான் இன்றும் போருக்குச் செல்ல தயாராக உள்ளேன்.

சிங்கள கலாசாரம் பேணப்பட வேண்டும். அதன் தனித்துவம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

— இவ்வாறு நளின் டி சில்வா தெரிவித்தார். [ஐ-6]

## ஜனதாதள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக. 7

இலங்கையில் தமிழர் பகுதியில் இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதைக் கண்டித்து ஜனதாதள் கட்சியின் மாநிலத் தலைவர் ஈ. வடிவேலு தலைமையில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. [இ-4]

## "உறங்காத கண்மணிகள்" வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக 7

நிதர்சனமும், மட்டு - அம்பாறை சிறப்புப் படையணியும் இணைந்து தயாரித்த, சி. சேரனின் "உறங்காத கண்மணிகள்" வீடியோப்பட வெளியீடு இன்று திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் மட்டு—அம்பாறைத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு ஈஸ்வரநாதன் தலைமையில் இடம் பெறும்.

மங்கள விளக்கை யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதியும், தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் திருமதி ஞா. ரதியும்ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.

வரவேற்புரையை நிதர்சனம் நடுவப்பணியகப் பொறுப்பாளர் திரு நகுலனும் வெளியீட்டுரையை நிதர்சனம் பொறுப்பாளர் திரு தமிழன்பனும் ஆற்றுவர்.

வீடியோ பிரதியை மட்டு -அம்பாறை சிறப்புத்தளபதி கருணா அம்மான் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி திரு. பதுமன் பெற்றுக் கொள்வார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

தொடர்ந்து "உறங்காத கண்மணிகள்" வீடியோப் படம் திரையிடப்படும். (எ)

### வீரச்சாவு

கடந்த மாதம் 27 ஆம் திகதி மல்லாகம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி முறியடிப்பில் விழுப்புண் அடைந்திருந்த போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவினார்.

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த வீரவேங்கை மணியரசன் என்றழைக்கப்படும் தமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் என்ற போராளியே வீரச்சாவடைந்தார்.


வேலணை - பெருங்குளம்

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி தேர்த்திருவிழா தினமாகிய 09-08-95 புதன்கிழமை

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்** ஆலயத்தில் ஏற்பாடு செய்துள்ள

**அலங்கார உற்சவ நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| காலை | 9-00 மணி | சங்காபிஷேக ஆரம்பம் |
| நண்பகல் | 12-30 மணி | அன்னதானம் |
| பிற்பகல் | 3-30 மணி | நவசக்தி அர்ச்சனை |
| மாலை | 4-30 மணி | அம்மன் வீதி உலா |

அடியவர்கள் மேற்படி உற்சவத்தில் பங்கு பற்றி அம்பாளின் அனுக்கிரகத்தை பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பரிபாலன சபை,
வேலணை - பெருங்குளம்
முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

[37899]


---

## சின்னஞ் சிறு விளம்பரம்


*விற்பனைக்கு*

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ந. வாகீசன், இல. 639/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [37894]

கறுப்பு நிற அல்சேஷன் ஆண் நாயும் [13 மாதம்), Dachshund இன நாய்க்குட்டிகளும் [3 மாதம்] விற்பனைக்குண்டு. இல. 36/1, ஆடிய பாத வீதி, கல்வியங்காடு. [37895]

*மலிவு விற்பனை*

ஆகஸ்ட் 07 தொடக்கம் மருத்துவ, விஞ்ஞான, வணிகத்துறைகளைச் சேர்ந்த ELBS நூல்களும், இதர நூல்களும் மலிவு விலையில் விற்கப்படும். "யாழ்ப்பாணப் புத்தக நிலையம்" 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-1724]

*மணப்பெண் தேவை*

இந்து, அரச உத்தியோகஸ்தர், 31 வயது, தீய பழக்கமற்ற, தோஷமற்ற, நற்பண்புகள் நிறைந்த, அழகிய மகனுக்கு நற்குடும்பத்தில் படித்த அழகிய மணப்பெண் தேவை. சாதகத்துடனும், புகைப்படத்துடனும் கடித மூலம் தொடர்பு கொள்க: இல. 820, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37893]

*அரசியல் விஞ்ஞானம்*

A/L 1994ஆம் ஆண்டுக்குரிய வினா-விடைக் குறிப்பு ஆக்கியோன்: கியூபேட் B.A. கிடைக்குமிடங்கள்; புதிய உயர் கல்லூரி, மக்மிலன் புத்தகசாலை (37885]

*புதிய பாடத் திட்டம்*

1997க்கான க. பொ. த. உயர்தரம் வணிகத்துறைக்கான முழுப்பாடத்திட்டம், பொருளியல், கணக்கியல், வர்த்தகம், புள்ளிவிவரவியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கியது. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1999)


## செப்ரிசீமியா மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 7

செப்ரிசீமியா ஏற்பட்டு யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நாகமணி ரட்ணம் [வயது 60] என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். [எ-15]

## கள்ளின் விலை அதிகரிப்பு

தென்மராட்சி, ஒக. 7

இம் மாதம் முதலாம் திகதி முதல் கள்ளின் விலை, போத்தலுக்கு இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. [எ-117]

## திருட்டுக்கள் குறைந்தன

யாழ்ப்பாணம், ஒக. 7

அச்சுவேலி, ஆவரங்கால் புத்தூர் போன்ற பகுதிகளில் இரவு வேளைகளில் தோட்டங்களில் இடம்பெற்று வந்த திருட்டுச்சம்பவங்கள் கோப்பாய், தமிழீழக் காவல்துறையினரது துரிதரோந்து நடவடிக்கையினால் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [எ-30]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# 4 பிராந்தியங்களாக பிரித்து அதிகாரப் பகிர்வு வழங்குக!

## சந்திரிகாவுக்கு தொண்டா நேரில் ஆலோசனை

கொழும்பு, ஓக. 7

"இலங்கையை எட்டுப் பிராந்திய சுயாட்சி அலகுகளாகப் பிரிப்பது உகந்ததல்ல. நான்கு அதிகாரப்பகிர்வு அலகுகளாகவே பிரிக்க வேண்டும்"

அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து கலந்துரையாடிய சமயமே அமைச்சர் தொண்டமான் மேற்கண்ட யோசனையை தெரிவித்துள்ளார்.

அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்த யோசனைகள் வருமாறு:-

★ இலங்கையை எட்டுப் பிராந்திய சுயாட்சி அலகுகளாக பிரிப்பது உகந்ததல்ல வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு பிராந்தியங்களும் சுயாட்சி அமைப்பைப் பெறுவதற்கு போதுமானவையல்ல.

அதிகாரப்பகிர்வில் மாகாண சபை முறை தோல்வி கண்டுள்ளதை கடந்த கால அனுபவங்கள் காட்டி நிற்கின்றன.



தொண்டமான்

எனவே அதிகாரப் பகிர்விற்கென நான்கு அலகுகள் யோசனையை இ.தொ.கா. முன்வைக்கிறது.

● வடக்கு - கிழக்கு மாகாணங்கள்.

● வடமத்திய — வடமேற்கு மாகாணங்கள்.

● மத்திய — ஊவா — சப்பிரகமுவ மாகாணங்கள்.

● மேல் — தென் மாகாணங்கள்.

— என்ற அடிப்படையில் நான்கு பிராந்தியங்களுக்கு முழுமையான சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.

★ சுதந்திரம் கிடைத்த போது இருந்த அதே எல்லைகளை வட - கிழக்கு பிராந்திய சபை கொண்டிருக்க வேண்டும். பிராந்திய சபையின் விருப்பத்துடனேயேயன்றி இது மாற்றப்படக் கூடாது.

அரசு வெளியிட்டுள்ள உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்டம், பிராந்திய சபையின் தற்போதைய எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒத்துப்போக வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் முன்னைய எல்லைகளே ஏற்கப்பட்டு அவற்றில் எந்த வித மாற்றமும் ஏற்படுத்தக் கூடாது என்று இ.தொ.கா. வலியுறுத்துகிறது.

மலையகத் தமிழர்கள்

★ சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒத்துப்போக வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால், அதே அடிப்படையில் மலையக இந்திய வம்சாவளித் தமிழர்களும் கணிக்கப்பட்டு அவர்களுக்கு ஏற்ற அரசியல் நிர்வாக அலகு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

★ அரசியல் தீர்வு யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் பங்காளிகளாக வரவேண்டும்.

★ கடந்த 12 வருடங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். சட்டம், ஒழுங்கைப் பேணுதல், அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்கு தேவையான சகல வாய்ப்புக்களையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

எனவே அதிகாரப்பகிர்வில் பொறுப்பினை விடுதலைப் புலிகளின் பொறுப்பில் விடுவதே நிர்வாகத்துக்கான இலக்காக அமையும்— என்று தெரிவித்தார்.

## வதந்திக் கொள்ளையர்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத்தின் அக்கிரமமும், அட்டூழியமும் மக்களின் வாழ்க்கையை மிகப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கின்றன. வாழ்க்கையையே சந்தேகத்துக்குரியதும் ஆக்கி வருகின்றன.

"முன்னேறிப் பாய்தல்" தாக்குதலின்போது ஏற்படுத்திய அனர்த்தங்களும், உண்டாக்கிய அழிவுகளும் போதாது என்று, அதனைப் போலப் பலமடங்கு பேரழிவை உண்டாக்கக் கங்கணம் கட்டி நிற்கிறது இராணுவம்.

எந்தவேளை, எந்த இடத்தில், என்ன நடக்குமோ என்ற பதற்றத்தினால் குடாநாட்டு மக்கள், உடல், உளப் பலவீனம் அடைந்துள்ளார்கள். உயிரை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது; எப்போது மன நிம்மதியுடன் வாழ்வது என்ற மனச்சோர்வும் மக்களிடம் விரவியுள்ளது.

வழமையான மனித வாழ்க்கை நிலையிலிருந்து மக்கள் தளர்வு கண்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, உணவுப் பேர்வழிகளும், திருடர்களும், கொள்ளையர் கூட்டங்களும், வதந்தி பரப்பும் காவாலிகளும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடத்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக வதந்தி பரப்புவோர் மக்களை மேன்மேலும் பதற்றப்பட வைத்து இம்சை புரிகின்றனர். நொந்து, நலிந்து போயிருக்கும் மக்களை வதந்தி பரப்பி மனச் சித்திரவதை செய்யும் இந்த துரோகிகளில் பலரும் கொள்ளையர்களே.

இராணுவம் அங்கே வந்து விட்டது; இங்கே நிற்கிறது; என்று பொய்களைப் பரப்பி விட்டு, மக்கள் தங்கள் இல்லங்களை விட்டு புறப்பட்ட மறுகணமே அவர்களின் வீட்டுப் படலைகளைத் திறந்து கொண்டு உட்சென்று கொள்ளை அடிக்கிறார்கள் இவர்கள். கிராமத்துக்கு கிராமம் ஊருக்கு ஊர், குறிச்சிக்குக் குறிச்சி, திட்டமிட்டுத் திருடும் கோஷ்டிகள் இயங்குகின்றன.

இராணுவ நடவடிக்கையால் அண்மையில் பாதிக்கப்பட்ட வலி - மேற்கு, வலி - வடக்குப் பகுதிகளில் வதந்தி பரப்பிக் கொள்ளை அடிக்கும் குழுக்கள் அடிக்கடி மக்களை அலைத்து உலைக்கின்றன.

இராணுவம் புரியும் அட்டூழியங்களால் பாதிக்கப்படும் தம் சகோதரர்களுக்கு, ஊரவர்களுக்கு உதவ வேண்டியவர்களே, பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல, அவர்களிடம் கொள்ளையடிப்பதற்கு வதந்திகளைப் பரப்புவது பெரும் சமூகத் துரோகமாகும்.

இந்த வதந்திக் கொள்ளையரின் வலைக்குள் விழாமல் இருக்க மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். தாம் கேள்விப்படும் தகவல்கள் "கதைகள்" உண்மையானவையா என்பதனை தீர்க்கமாக விசாரிக்க வேண்டும். மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற மன நிலையை மாற்றி, உறுதியுடன் நின்று உண்மையை அறிய வேண்டும்.

காவல்துறையினரும் இது விடயத்தில் தமது புலனாய்வைக் கூர்மைப்படுத்தி மக்கள் விரோதிகளை இனங்கண்டு வெளிப்படுத்தித் தண்டிக்க வேண்டும்.

## சைவசமய பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஓக. 7

சைவ சித்தாந்த நோக்கிலான ஒழுங்குகளும் அனுசரணைகளும் என்ற தொடரில் நல்லை ஆதீனத்தில் மு. ப. 9 மணி முதல் ந.ப. 12 மணி வரை நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் —

இன்று —

"சிவாலய நடைமுறை விதிகள்" குறித்து பண்டிதர் மு. கந்தையா நிகழ்த்தும் கலந்துரையாடல் இடம்பெறும்.

[க-30]

## ஒரு கோடி கையெழுத்து திரட்ட முயற்சி

சென்னை, ஓக. 7

இலங்கையில் இனப்படுகொலை நடப்பதை தடுக்கக் கோரி தமிழகத்தில் ஒரு கோடி மக்களின் கையெழுத்துக்களைத் திரட்ட திராவிடர் கழகம் உத்தேசித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

[உ-3]

## செஞ்சிலுவை சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 7

செஞ்சிலுவைச் சங்க நல்லூர்ப் பிரிவுத் தொண்டர்கள், அங்கத்தவர்கள் —

பாடசாலை வட்டங்களாகிய யாழ். இந்து, கனகரத்தினம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த தொண்டர்கள்— ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

[இ-3]

## நடேஸ்வரா மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 7

ஜி. சீ. ஈ (சாதாரண) பரீட்சை —

ஆண்டு 9 தொழில்நுட்பப் பரீட்சை — ஆகியவற்றுக்குத் தோற்றும் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மாணவர்களை நாளை செவ்வாய் காலை 10 மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் சமுகமளிக்குமாறு அதிபர் கே. தனபாலசிங்கம் கேட்டுள்ளார்.

(இ-3)

## தமிழீழ பாதுகாப்பு நிதி; பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளில் அமைந்துள்ள — வாணிபம் /தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் — ஊழியர்களுக்கான தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவது தொடர்பான— சிறப்புக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. அனைத்து ஊழியர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

புகையிலை வாணிபர்கள், சுருட்டு உற்பத்தியாளர்கள், சுருட்டு தொழிலாளர்கள் ஆகியோருக்கான — தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவது தொடர்பான — சிறப்புக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

(உ-3)

## பாதுகாப்பு நிதி செலுத்த கோப்பாயில் பணிமனைகள்

யாழ்ப்பாணம், ஓக. 7

தமிழீழ பாதுகாப்பு நிதி செலுத்துவதற்கு வசதியாக கோப்பாய் வட்டத்தில் பாதுகாப்பு நிதி செலுத்தும் செயலகங்கள் திறக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:-

★ அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, இடைக்காடுப் பகுதி மக்களுக்கு — புத்தூர் சந்தியில் உள்ள செயலகத்தில்.

★ நீர்வேலி, கோப்பாய், அச்செழு, ஊரெழு, இருபாலைப்பகுதி மக்களுக்கு— கோப்பாய் சந்தியில் உள்ள செயலகத்தில்;

மேற்படி இரு அலுவலகங்களிலும் இந்நிதியினைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என அரசியல் துறையின் கோப்பாய் வட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

(உ)

## 3 கப்பல்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னேற்றம் காணப்படாததால், அக்கப்பல்கள் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநிற்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிவாரணப் பொருள்களுடன் "லங்காகல்யாணி" கப்பலும் —

மண்ணெண்ணெய்யுடன் "மாகோ" கப்பலும் —

அத்தியாவசியப் பொருள்களுடன் "ஹெந்தல" கப்பலும் —

வடக்கே வரத்தயார் நிலையில் உள்ளன.

[உ-3]

## கப்பல்களுக்கு செஞ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதை அடுத்து —

குடாநாட்டுக்கு பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களுக்கு வழங்கி வந்த பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அண்மையில் வாபஸ் பெற்றது தெரிந்ததே.

துறைமுக, கப்பல்த் தொழில், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் கடந்த வாரம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து யாழ். குடாநாட்டிற்கு உணவு விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியப்பாடு பற்றிக் கலந்துரையாடினார்.

"விவரங்கள் எனக்குத் தெரியாது. ஆனால் அரசாங்கத்துக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் யாழ். குடாநாட்டுக்கு உணவு விநியோகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அவசியமான சூழ் நிலைகள் உருவாகவில்லை" என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பேச்சாளரான செல்வி ஷவுன் ஹேய்ற் கடந்த வெள்ளியன்று கூறினார்.

"நிலைமை அப்படியே இருக்கிறது. உணவுக் கப்பல்கள் பருத்தித்துறைக்கு செல்லும் அடையாளம் எதுவும் தெரியவில்லை." — என்று யாழ்ப்பாண அரச அதிபர் திரு கே. பொன்னம்பலம் வெள்ளியன்று கொழும்பில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் அரச அதிபர் கூறினார்.

அரசாங்கம், செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியவற்றுக்கிடையில் செய்யப்பட வேண்டிய ஒப்பந்தம் ஒன்றின் நகலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு கடந்த 31 ஆம் திகதி அமைச்சர் அஷ்ரப்பிடம் கையளித்தது.

ஆனால் அந்த ஒப்பந்தத்துக்கு அரச தரப்பு இணக்கம் தெரிவித்ததாகத் தெரியவரவில்லை

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பொறுப்பில் சேவையில் ஈடுபடும் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதை செ. ச. சர்வதேசக்குழு நிறுத்தியுள்ள போதிலும்—

தனது பொறுப்பில் கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தி நோயாளர்களை ஏற்றி வருவது மற்றும் மனிதாபிமான சேவைகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-க)

## மூதறிஞர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றவர். தமது இறுதிக் காலத்திலும் அவரது புலமையும், திறனும் மழுங்காதிருந்ததைக் காண முடிந்தது. இவர் யாழ். இந்துக் கல்லூரியின் மிக மூத்த பழைய மாணவருமாவார். இவர் இறக்கும் போது வயது 90 ஆகும்.

இவரது இறுதிக் கிரியைகள் நேற்று ஏழாலையில் நடைபெற்றன.

(க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## கணபதிப்பிள்ளை கோவேந்திரமணி

சுன்னாகம் பெரியவளவை (இந்திர வாசா) பிறப்பிடமாகவும், தற்போது அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கோவேந்திரமணி 24-07-95 அன்று அவுஸ்ரேலியாவில் காலமானார்.

இவர் காலம் சென்ற பொன்னம்பலம் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலம்சென்ற சுவேந்திராதேவி, கணேந்திரநாதன் [ப. நோ. கூ. சங்கம் தெல்லிப்பளை], பவேந்திரநாதன் [நில அளவையாளர் அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசலிங்கம் [மகாராஜா நிறுவனம் கொழும்பு], சவிவரி, குணதேவி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வைத்திலிங்கம் (கணக்காளர் போட் றெக்ஸ் கொம்பனி கொழும்பு), மகாலிங்கம் (மகாராஜா நிறுவனம் - கொழும்பு), கிருஷாந்தி (யாழ். பல்கலைக்கழகம்]முகாமைத்துவ பிரிவு 1ஆம் வருடம்), கஜனன் (யாழ். இந்து உயர்தர வகுப்பு மாணவன்), கோகுலன் (பல்கலைக்கழகம் வைத்திய பீடம் அவுஸ்ரேலியா), தீபன் (அவுஸ்ரேலியா), சருபன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார். அன்னாரது தகனக்கிரியைகள் 26-07-95 அன்று அவுஸ்ரேலியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கணேந்திரநாதன்.
(மகன்)

நெட்டிலிப்பாய்,
(நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடி)
கோண்டாவில். (சி-2004)

## R. N. சிவப்பிரகாசம் J. P.

மல்லாகத்தை இருப்பிடமாக கொண்டவரும், சைவப் பெரியாரும், பிரபல சட்டத்தரணியும், சமாதான நீதிபதியுமாகிய திரு. R. N. சிவப்பிரகாசம் 06-08-95 அதிகாலை ஏழாலையில் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற திருமதி ஞானலட்சுமியின் அன்புக் கணவரும், சிவ. சிறீதரன் [சட்டத்தரணி, கனடா], கெங்காதரன் [அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூட்டுறவுச் சங்கம் முகாமையாளர்], பாலசுப்பிரமணியம் வேதாரகௌரி [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சட்டத்தரணியும், செனட்டருமான சு. நடராசாவின் அன்பு மைத்துனரும், திருமதி சத்தியவதி நடராசாவின் அன்புச் சகோதரரும், சிவரூபன் ஜாமழை, கௌலினி, பிரேமரூபன், உருத்திரவேணி, சிவப்பிரகாசம், ஐங்கரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 06-08-95 பகல் 12 மணிக்கு ஏழாலையிலுள்ள (மல்லாகம் புகையிரத வீதிக்கருகிலுள்ள) இல்லத்தில் நடைபெற்றது என்பதை அன்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. கெங்காதரன்
[மகன்]

உத்தமன் சிலையடி,
ஏழாலை மேற்கு,
ஏழாலை. [37898]

## திருமதி
## பார்வதிப்பிள்ளை பொன்னுத்துரை

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி பார்வதிப்பிள்ளை பொன்னுத்துரை நேற்றுக் காலமானார்.

இவர் ஆறுமுகம் பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், தனலட்சுமி, பரணிமலர் [அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்], சரவணபவாநந்தம் [மகாவித்தியாலயம், அச்சுவேலி), நிற்குணாநந்தம் [கிளி கடை, நீர்வேலி], சண்முகலிங்கம் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], ஜெயலட்சுமி, விஜயலட்சுமி (அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி), ஜெயராணி [ஜேர்மனி], சற்குணநாதன் [விவசாய பீடம், கிளிநொச்சி], ஆறுமுகசாமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணபவன், மகாதேவன், விஜயசிறி [அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி], கௌரீஸ்வரி (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), அமரர் சிவலிங்கம், பாஸ்கரன் [ஜேர்மனி] ஆகியோரின் மாமியாரும், கிருபானந்தபவானி (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), சதீஸ்குமார் (சுவிட்சர்லாந்து), கார்த்திகா, நவீனன், பிரவீணா, பிருந்திகா [ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (7-8-95) பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி கிராஞ்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
ஆ. பொன்னுத்துரை
(கணவர்)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (37906)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-08-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ரத்வத்தை---
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அலுவலகத்துக்கு இவர்கள் மூவரும் சென்று தங்களை அறிமுகப்படுத்தி அமைச்சரின் மாநாட்டு அறைக்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டனர்.

ஆனால் அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தி "உங்களைச் சோதனை செய்த பின்னரே உள்ளே செல்ல அனுமதிப்போம்" என்று கூறி அடம் பிடித்தனர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நாங்கள் எம்.பிக்கள். ஏனைய அரச அதிகாரிகள் சோதனையிடப்படாமல் செல்கிறார்கள். எங்களுக்கு மட்டும் சோதனையா?' என்று கேட்ட ஈ.பி.டி.பி. எம்.பிக்கள் உடல் சோதனைக்கு நாம் இடமளிக்க முடியாது என்று கூறி வாதிட்டனர்.

ஆயினும் உள்ளே செல்ல அனுமதி கிடைக்காததை அடுத்து அவர்கள் மூவரும் அங்கிருந்து திரும்பிச் சென்றனராம்.

டக்ளஸ் தேவானந்தாவுடன் எம். பிக்களான சந்திரகுமார், எஸ். சிவதாஸன் ஆகியோரே அமைச்சரைச் சந்திக்கச் சென்றிருந்தனர்.

இச் சம்பவம் குறித்து இவர்கள் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் முறையிட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை ஞானப்பிரகாசம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும், வீரகத்திப்பிள்ளையார் கோவிலடி, சீனியர் லேனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அளவெட்டி ஜெயா பிறஸ் உரிமையாளர் கிருஷ்ணபிள்ளை ஞானப்பிரகாசம் நேற்று மாலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - செல்லம்மாவின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - அன்னப்பிள்ளையின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கட்டுடை சிவகௌரி அச்சக உரிமையாளர் சிவசோதியின் அன்புச் சகோதரரும், சற்குணராசா (முல்லை- பிரான்ஸ்), வசந்தமலர், ஜெயமலர் [பிரான்ஸ்], ஜீவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயலட்சுமி (பிரான்ஸ்], சந்திரபாலா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [7-8-95) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 40/40 A, சீனியர் லேன், வண்ணார்பண்ணையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
சி. ஷர்மிளா
[பேர்த்தி]

40/40A, சீனியர் லேன்,
வீரகத்திப் பிள்ளையார் கோவிலடி,
வண்ணார்பண்ணை. 37907

நிதர்சனமும் மட்டு. அம்பாறை சிறப்புப் படையணியும்
இணைந்து தயாரித்து வழங்கும்
சி. சேரனின்
# "உறங்காத கண்மணிகள்"
வீடியோ படவெளியீட்டு விழா
இடம்:- ஸ்ரீதர் திரை அரங்கு
காலம்:- இன்று (7.8.95) பிற்பகல் 4.30 மணிக்கு
சிறப்புப் பிரதிகள் பெறுவோர்

| | | |
|---|---|---|
| 1] | திரு. மா. அரியரத்தினம் | ஈழஊற்று. அருச்சனா சாலை, யாழ்ப்பாணம் |
| 2] | திரு. ஆ. சிலன் | மொறாயஸ் கண்ணாடி அகம், ,, |
| 3] | திரு. சே. சுந்தரலிங்கம் | கணேசானந்தா பட்டு அகம், ,, |
| 4] | திரு. கோ. கதிரவேல் | புஸ்பா அன் கோ, ,, |
| 5] | திரு. இ. தேவராசா | சோபனா ஆடை அகம், ,, |
| 6] | திரு. ச. சிவலோகநாதன் | விமகநாதன் வண்ணச்சோலை, ,, |
| 7] | திரு. சி.யோ.செல்வநாயகம் | ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ், ,, |
| 8] | திரு. து. அழகரத்தினம் | புத்தொலி எலற்றிக்கல்ஸ் ,, |
| 9] | திரு. எஸ். என். சிறிதரன் | வி. எஸ். பி. குறூப், ,, |
| 10] | திரு. க. கனகரத்தினம் | அம்பிகை களஞ்சியம், ,, |
| 11] | திரு. பூ. றஜிதரன் | ராசி பட்டுச் சோலை, ,, |
| 12] | திரு. ச. இராசேஸ்வரன் | நதியா நகை மாடம், ,, |
| 13] | திரு. க. சிறிகாந்தன் | துணிப்பூங்கா ,, |
| 14] | திரு. பொ. கோணேஸ் | அலங்கார் நகை மாளிகை, ,, |
| 15] | திரு. மே. யோகேஸ்வரன் | நியூ லலிதா நகை மாடம், ,, |
| 16] | செல்வி. இ. கீதாஞ்சலி | லலிதா அணிகலப் பூங்கா, ,, |
| 17] | திரு. என். சுந்தரலிங்கம் | சாந்தி புடவை அகம், ,, |
| 18] | திரு. ம. வரதராசசிங்கம் | ஈஸ்வர பகவான், ,, |

[சி/2006]

சைவப் பணிக்காக தம்மை நீண்டகாலம் அர்ப்பணித்தவரும்
சைவ பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும்
முதறிஞரும்,
"இந்து சாதனம்"
பத்திரிகையின்
கௌரவ ஆசிரியருமான



# நம. சிவப்பிரகாசம் ஐயா
அவர்களுக்கு
# இதய அஞ்சலி

-- சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். --

(சி-2007)